## ABSTRACT

Schemes – State Scheme – Member of Legislative Assembly Constituency Development Scheme (MLACDS) – Implementation of Scheme – Administrative Sanction of funds and prescribing Guidelines for the year 2020-2021 – Approved – Orders - Issued.

## Rural Development and Panchayat Raj (SGS.1) Department

**G.O. (Ms.) No.130** **Dated: 27.07.2020**

சார்வரி – ஆடி 12–ந்தேதி
திருவள்ளுவர் ஆண்டு–2051

**Read:**

(1) G.O.(Ms).No.80, Rural Development and Panchayat Raj (SGS-1) Department, dated 27.6.2019.

(2) G.O.(Ms).No.142, Rural Development and Panchayat Raj (SGS-1) Department, dated 30.9.2019.

(3) G.O.(Ms).No.84, Rural Development and Panchayat Raj (SGS-1) Department, dated 31.3.2020.

(4) G.O.(Ms).No.89, Rural Development and Panchayat Raj (SGS-1) Department, dated 21.4.2020

(5) From the Director of Rural Development and Panchayat Raj, Letter Rc.No.17554/ 2020/NEDM-2, dated 21.5.2020.

-----

**ORDER:**

In the Government Order first read above, orders along with detailed Guidelines were issued for the implementation of Member of Legislative Assembly Constituency Development Scheme (MLACDS) for the year 2019-2020. In the Government Order second read above, orders were issued for enhancing the funds from Rs.2.50 crore to Rs.3.00 crore along with revised Guidelines for the implementation of the above scheme for the year 2019-2020. In the Government Order third read above, the Government has given permission for allocation of a minimum amount of Rs.25 lakh by the Members of Legislative Assembly under the Member of Legislative Assembly Constituency Development Scheme for purchase of equipments for Government Hospitals / Dispensaries for medical testing, screening and other facilities required to detect and contain COVID-19 and the expenditure under the one time dispensation

shall be met from the un-sanctioned amount available for the year 2019-20 and otherwise, it shall be adjusted for the allocation of the financial year 2020-21.

2. In the Government Order fourth read above, orders were issued to reduce the per MLA allotment in Budget Estimate 2020-21 to Rs.2 crore by way of reduction in appropriation and allocate to the tune of Rs.235 crore at the rate of Rs.1 crore per MLA from the MLACDS funds to the Health and Family Welfare Department for procuring medicines and materials to detect and contain COVID-19 through Tamil Nadu Medical Services Corporation (TNMSC).

3. The Director of Rural Development and Panchayat Raj has, therefore, sent necessary proposal along with draft guidelines and requested the Government to issue necessary Government Orders for the implementation of Member of Legislative Assembly Constituency Development Scheme (MLACDS) along with fund allocation of Rs.2 crore per Constituency per annum for the year 2020-21 in which Rs.1 crore for "tied component" and Rs.1 crore for "un-tied component".

4. The Government have carefully examined the proposal of the Director of Rural Development and Panchayat Raj in detail. Accordingly, the Government issues the following orders:-

(i) Administrative sanction is accorded for a sum of Rs.470.00 crore (Rupees four hundred and seventy crore only) for the implementation of Member of Legislative Assembly Constituency Development Scheme (MLACDS) for the year 2020-21;

(ii) Detailed guidelines both in English and Tamil for the implementation of Member of Legislative Assembly Constituency Development Scheme (MLACDS) for the year 2020-21 is annexed to this order.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**HANS RAJ VERMA**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

To
All Members of Legislative Assembly
(through the Director of Rural Development and Panchayat Raj).
The Director of Rural Development and Panchayat Raj,Chennai–15.
The Additional Chief Secretary to Government,
Municipal Administration and Water Supply Department, Chennai – 9.
The Secretary, Tamil Nadu Legislative Assembly Secretariat, Chennai – 9.
All District Collectors (except Chennai).
All Project Directors, District Rural Development Agencies
(through the Director of Rural Development and Panchayat Raj).

p.t.o.,

The Commissioner, Corporation of Chennai, Chennai-3.
The Director of Town Panchayats, Chennai-108.
The Commissioner of Treasuries and Accounts, Chennai-15.
The Member Secretary, State Planning Commission, Chennai-5.
The Director, Local Fund Audit Department, Chennai-108.
The Principal Accountant General, Chennai – 18/35.
The Pay and Accounts Officer (Secretariat), Chennai – 9.
The Pay and Accounts Officer (South), Chennai – 35.
The Pay and Accounts Officer (East), Chennai – 5.
The Pay and Accounts Officer (North), Chennai –1.
The Pay and Accounts Officer, Madurai.
All Treasury Officers.
The National Informatics Centre, Chennai-9.

Copy to
The Principal Secretary/Secretary-II to the Hon'ble Chief Minister, Chennai-9.
The Special Personal Assistant to
Hon'ble Minister for Municipal Administration, Rural Development, Implementation of Special Programme, Chennai-9.
The Private Secretary to the Chief Secretary to Government, Chennai-9.
The Principal Private Secretary to Additional Chief Secretary to Government, Rural Development and Panchayat Raj Department, Chennai-9.
Finance (BG-I/BG-II/RD) Department, Chennai – 9.

**// FORWARDED BY ORDER //**

**Section Officer.**

## *ANNEXURE* TO G.O. (Ms) No.130 RURAL DEVELOPMENT AND PANCHAYAT RAJ (SGS.1) DEPARTMENT, DATED 27.07.2020

## GUIDELINES FOR THE IMPLEMENTATION OF MEMBER OF LEGISTLATIVE ASSEMBLY CONSTITUENCY DEVELOPMENT SCHEME (MLACDS) - 2020-21

Member of Legislative Assembly Constituency Development Scheme (MLACDS) is being implemented in Tamil Nadu in order to identify and execute the essential infrastructure gaps in the assembly constituencies. The MLAs identify infrastructure gaps in their constituencies and propose the works to be executed under the scheme. This scheme is implemented both in rural and urban areas. From 2019-20 onwards, the fund allocation under the scheme had been increased from Rs.2.50 Crore to Rs.3.00 Crore per constituency per annum.

In the G.O. No.(Ms) 89, Rural Development and Panchayat Raj (SGS.1), Department, dated 21.04.2020, the Government ordered to reduce the per MLA allotment in Budget Estimate 2020-21 to Rs.2 crore by way of reduction in appropriation and orders to allocate to the tune of Rs.235 crore at the rate of Rs.1 crore per MLA from the MLACDS funds to the Health and Family Welfare Department for procuring medicines and materials to detect and contain COVID-19 through Tamil Nadu Medical Services Corporation (TNMSC).

Based on that, the remaining amount of Rs.2 Crore is allocated per Constituency to implement the scheme during 2020-21. Out of which, an allocation of Rs.1 Crore should be earmarked for 'tied component' which is to be mandatorily earmarked for priority works specified below. Out of the remaining 'un-tied component' of Rs.1 Crore, the Members of the Legislative Assembly can choose any work of their choice of not falling within the 'negative list'. The detailed guidelines are given below:

### 1. WORKS TO BE TAKEN UP UNDER "TIED COMPONENT" OF Rs.1.00 CRORE.

As stated above, Rs.1 crore shall be spent on works prescribed under "Tied Component".

**1.1. Rs. 50 Lakh for Infrastructure to Schools, Anganwadi Centres / Noon Meal Centres and Drinking Water Supply works:** The MLA can choose one or more works under tied component according to his/her choice under any of the following category in rural and urban areas:

a) Infrastructure to schools (Corporation / Municipality / Panchayat Union / Government Schools only) - toilet facilities (especially separate toilets for girls, boys and staff) drinking water supply, Compound wall to Schools, construction of buildings for classrooms, libraries and laboratories in schools.

b) Infrastructure facilities to the Anganwadi centres and Noon Meal Centres - Construction of Anganwadi Buildings / Noon Meal Centres / Noon Meal Kitchen Sheds, Anganwadi Baby friendly toilets, Supply of Drinking water to Anganwadies and also modernizing the Anganwadi Kitchen Sheds with Gas connection etc.

c) Drinking Water supply works - augmentation of existing source like provision of individual power pump works, mini power pump works, Construction of Over Head Tanks, New Bore Well, Deepening of Bore well, New Hand pumps, Enhancing of motor capacity, Construction of Open Well, Deepening of existing Open Well etc.

**1.2. <u>Rs.25 Lakh for COVID-19 pandemic relief works:</u>** In order to control the spread of COVID-19 both in rural and urban areas, the MLA shall allocate a sum of Rs.25 Lakhs to purchase the following equipments for Government Hospitals / Dispensaries for medical testing, screening and other facilities:

(1) Medical equipments like ventilators, Multi para monitors, Thermal Scanners, Oxygen cylinders, Laboratory equipments etc.
(2) Hospital Furniture like Cots, Drip Stands, Mattresses etc.
(3) Disinfection equipments like power sprayers and Knapsack Sprayers.
(4) Personal Protective Equipments like PPE Kits, Triple Layer Masks, N95 Masks etc.
(5) Setting up of isolation room, quarantine facilities.
(6) Any other medical equipment recommended by the Director of Public Health for COVID-19.

**1.3. <u>Rs.25 lakh for the Other Tied works:</u>** The MLA can choose one or more of the following works Under the tied component, according to his/her choice, for an amount **not less than Rs.25 lakh,** which is the remaining amount of the total tied component amount of Rs.1 crore after allotment of Rs.75 lakh towards the works indicated against Para 1.1. and 1.2 of this guidelines.

**a) In Rural Areas**

(1) Repair of houses constructed in Adi Dravidar habitations under various Government Schemes up to 31.12.2010 under Indira Awaas Yojana (IAY) / Group Houses, TAHDCO and Tamil Nadu Slum Clearance Board can be taken up not exceeding Rs.50,000/- per house.

(2) Installation of Solar Street lights / Roof top solar power in Government buildings. (Subsidy provision available from the Ministry of New and Renewable Energy, GOI should be claimed and remitted to concerned scheme account without fail).

(3) Up-gradation of gravel/WBM Roads to BT standard.

(4) Renewal of badly worn-out BT roads (laying of BT layer only by filling up of potholes, if necessary).

(5) Laying of Cement Concrete Roads / Paver Blocks in Streets and Lanes.

(6) Provision of rooms, buildings and / or compound wall for Government and Local body Hospitals, Primary Health Centres, Government Veterinary Hospitals, Government Colleges and Government Hostels, Government ITI and Government Polytechnics.

(7) Provision of Infrastructural facilities to Government Special Schools for the differently abled and Government Orphanages.

(8) Construction of bridges.

(9) Provision of additional Burial Grounds / Cremation Grounds to the Village Panchayats, if necessary.

(10) Provision of compound wall / fencing in the burial grounds belonging to Public Wakf registered with Wakf Board. Since the Wakf Board does not have any Engineering wing, this work may be entrusted to the Local Bodies concerned.

(11) Construction of integrated sanitary complex for women and men.

(12) Construction of Public Distribution shop buildings.

(13) Construction of building for physical fitness centre/Gymnasium along with purchase of required equipments which will be the asset of concerned Local Body.

**b) In Urban Areas**

(1) Repair of houses constructed in Adi Dravidar habitations under various Government Schemes up to 31.12.2010 under Indira Awaas Yojana (IAY) / Group Houses, TAHDCO and Tamil Nadu Slum Clearance Board can be taken up not exceeding Rs.50,000/- per house.

(2) Installation of Solar Street lights / Roof top solar power in Government Buildings / LED Street lights. (Subsidy provision available from the Ministry of New and Renewable Energy, GOI should be claimed and remitted to concerned scheme account without fail).

(3) Up-gradation of gravel / WBM Roads to BT standard.

(4) Renewal of badly worn-out BT roads (laying of BT layer only by filling up of potholes, if necessary).

(5) Laying of Cement Concrete Roads.

(6) Provision of rooms, buildings and / or compound wall for Government and Local body Hospitals, Primary Health Centres, Government Veterinary Hospitals, Government Colleges and Government Hostels, Government ITI and Government Polytechnics.

(7) Provision of Infrastructural facilities to Government Special Schools for the differently abled and Government Orphanages.

(8) Construction of bridges.

(9) Provision of infrastructure and compound wall facilities to burial grounds/cremation grounds.

(10) Provision of Concrete Pavements with storm water drains, if so required.

(11) Formation of new Public Parks

(12) Construction of Public Toilets.

(13) Construction of Public Distribution shop buildings.

(14) Purchase of Jetrodding Machines, hydraulically operated sewerage machines for urban local bodies.

(15) Provision of compound wall / fencing in the burial grounds belonging Public Wakf registered with Wakf Board. Since the Wakf Board does not have any Engineering wing, this work may be entrusted with the Local Bodies concerned.

(16) Construction of building for physical fitness centre / Gymnasium along with purchase of required equipments which will be the asset of concerned Local Body.

## 2. Works to be taken up under "Un-Tied Component" of Rs.1 Crore

Any work not falling within the following **'negative list / prohibited works'** can be taken up under the un-tied component of MLACDS. **Works falling under the tied component can also be taken up under un-tied component of Rs.1 Crore.** Construction of Bus passenger's shelters is permitted under this component.

## 3. Negative List / Prohibited Works

The following works under the 'Negative list / prohibited works' cannot be taken up under the MLACDS unless specifically included in the exceptions:

**3.1** Construction of Office and residential buildings belonging to Central and State Governments including Public Sector undertaking, Co-operatives and societies.

**Exceptions:**

(i) Construction of Direct Procurement Centres, Milk Producers' Co-operative Societies, Bulk Chilling Centres.

(ii) Construction of Maintenance sheds, Compound walls and concrete flooring, Crew rest room and toilet facilities for Bus depots of State Transport undertakings.

**3.2** Assets for individual / family benefits

**Exception:**

(i) Construction of new houses in Town Panchayats as per the Pradhan Mantri Awaas Yojna (Gramin) norms.

**3.3** All renovation, maintenance and repair works.

**Exception:**

(i) Repair of houses constructed under Government Schemes up to 31.12.2010 including houses constructed under Indira Awaas Yojana (IAY) / TAHDCO and Tamil Nadu Slum Clearance Board can be taken up not exceeding Rs.50,000/- per house. However, permission letter should be obtained from the TNSCB/TAHDCO before taking up the repair works.

**3.4** Purchase of all movable items, equipments and furniture.

**Exceptions:**

(i) Provisions were made during 2016-17 for newly elected members of 15$^{th}$ Assembly and for the members re-elected who were members of 14$^{th}$ Assembly, to purchase Laptop or Desktop, Laser/ Inkjet Printer and Broadband / Internet Data card connection as one time purchase according to needs. In this connection, wherever such Laptop or Desktop, Laser/Inkjet printer and Broadband/Internet Connection were not purchased till last year, in such cases purchase of the above items, may be considered during 2020-21, as per the provisions contained in the G.O.(Ms.) No.95 Rural Development and Panchayat Raj (SGS-1) Department, dated 18.8.2016, and following the guidelines therein.

(ii) Purchase of furniture and equipments for Government Schools, Loca body Schools, Adi Dravidar Welfare Schools, Kallar Reclamation Schools, Government Colleges, Government Hostels, Government Hospitals, Primary Health Centres and Government Veterinary Hospitals, Government ITI, Government Polytechnic.

(iii) Purchase of aids and appliances for differently abled persons as per the guidelines issued in G.O.(1D)No.405, Rural Development and Panchayat Raj (SGS-1) Department, dated 17.08.2010 and Government Letter No.(1D) No.653, dated 31.12.2012 of Rural Development and Panchayat Raj Department for the value of Rs.5 lakh or above.

(iv) Purchase of CP chair for Polio and stroke attacked persons and purchase of Learning Kits for mentally challenged children in Government special schools.

(v) Purchase of physical exercise equipments for the physical fitness centre / Gymnasium belonging to local body which will be the asset of the concerned local body.

(vi) Purchase of equipments for installation of solar photovoltaic items in the existing Government buildings.

(vii) Purchase of Surveillance Cameras (CCTV-Closed Circuit Television) with allied equipments for the safety of public through District Collector / Superintendent of Police / Commissioner of Greater Chennai Corporation / Commissioner of Greater Chennai Police following procurement codal procedures.

**3.5** Any work in Government aided and Self Financing Schools and Colleges.

**3.6** All Works involving Commercial establishment / units.

3.7 Grants and loans, contribution to any Central and State / UT Relief Funds.

3.8 Acquisition of land or any compensation for land acquired.

3.9 Reimbursement of any type of completed or partly completed works or items.

3.10 All revenue and recurring expenditure.

3.11 Works within the places of religious worship and on land belonging to or owned by religious faiths / groups.

3.12 Desilting of Ponds, Ooranies, rivers, tanks, canals, channels and the like.

3.13 Gravel/WBM roads (roads up to BT standard alone should be taken up).

3.14 Installation of High Mast Lights.

**4**. An overall allocation of 22% of the total allocation under MLACDS should be made for areas predominantly inhabited by SC/ST persons in rural areas and for persons living in slums in urban areas.

**5**. The execution of works/ procurement of materials shall be undertaken strictly as per the Tamil Nadu Transparency in Tenders Act, 1998 and the Rules made during 2000 under it.

**6**. The Additional Chief Secretary to Government, Rural Development and Panchayat Raj Department is empowered to modify any of the above guidelines in consultation with the Director of Rural Development and Panchayat Raj based on the exigencies that may arise from time to time in the implementation of the Scheme.

**HANS RAJ VERMA,**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT.**

//TRUE COPY//

Section Officer.

**அரசாணை (நிலை) எண்.130 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அதி.1) துறை நாள் 27.07.2020**

**இணைப்பு**

## 2020–21–ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

சட்டமன்ற தொகுதிகளில் காணப்படும் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதி இடைவெளிகளைக் கண்டறிந்து அவற்றை செயல்படுத்துவதற்காக, தமிழ்நாட்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் தமது சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் தேவையான கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளிகளை கண்டறிந்து, இத்திட்டத்தின்கீழ் அப்பணிகளை செயல்படுத்திட பரிந்துரை செய்வார்கள். இத்திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு தொகுதிக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்த ஓராண்டிற்கான நிதி ரூ.2.50 கோடியை 2019–20 ஆம் ஆண்டு முதல் ரூ.3 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண். 89, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (மா.அ.தி–1) நாள்: 21.4.2020–ன்படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 2020–21 ஆம் ஆண்டின் திட்ட மதிப்பீட்டில் ஒரு சட்ட மன்ற உறுப்பினருக்கான நிதி ஒதுக்கீட்டில் தலா ரூ.1 கோடி வீதம் குறைப்பதன் வாயிலாக, ரூ.2 கோடி என நிர்ணயித்து, மொத்த ஒதுக்கீட்டில் ரூ.235 கோடி நிதியினை மாநில அளவில் ஒருங்கிணைத்து, சுகாதாரம் மறும் குடும்பநலத் துறைக்கு நிதி ஒதுக்கம் செய்யவும், அத்தொகையில் கோவிட் (COVID-19) வைரஸ் தொற்று பரவலை கண்டறிந்து கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு தேவையான மருந்துகள் மற்றும் பொருள்களை தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் வாயிலாக வாங்கிக் கொள்ளவும் அரசு ஆணையிட்டுள்ளது.

அதன் அடிப்படையில், 2020–21 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்திட ஒரு தொகுதிக்கு தலா ரூ.2 கோடி வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இத்தெகையிலிருந்து, கீழ்க்காணும் முன்னுரிமைப் பணிகளை கட்டாயமாக எடுத்துச் செய்ய ரூ.1 கோடி "வரையறுக்கப்பட்ட கூறு நிதியாக" ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். மீதமுள்ள "வரையறுக்கப்படாத கூறு நிதியான" ரூ.1 கோடியில், தடை செய்யப்பட்ட பணிகளின் பட்டியலில் இடம் பெறாத எந்தப் பணியையும் அவர் தம் விருப்பத்தின் அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர் தேர்வு செய்யலாம். அதற்கான வழிகாட்டு நெறிமுறைகளின் விவரங்கள் பின்வருமாறு:-

### 1. வரையறுக்கப்பட்ட கூறு நிதியான ரூ.1 கோடியில் எடுத்துச் செய்யக் கூடிய பணிகள்

மேலே குறிப்பிட்டுள்ளபடி, ரூ. 1 கோடி, வரையறுக்கப்பட்ட கூறு நிதியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு மட்டும் செலவு செய்யப்பட வேண்டும்.

**1.1** <u>பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள் / சத்துணவு மையங்கள் மற்றும் குடிநீர் திட்டப் பணிகளுக்காக ரூ. 50 இலட்சம்</u>: சட்டமன்ற உறுப்பினர், ஊரகம் மற்றும் நகர்ப்புறங்களில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பணிகளில் இருந்து, அவர் தம் விருப்பத்தின் அடிப்படையில் ஒன்று அல்லது அதற்கும் மேல் பணிகளை தேர்வு செய்திடலாம்.

a) பள்ளிகளுக்கு (மாநகராட்சி/ நகராட்சி / ஊராட்சி ஒன்றியம் / அரசு பள்ளிகள் மட்டும்) தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் – கழிவறை வசதிகள் (குறிப்பாக மாணவிகள், மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தனித்தனியாக கழிப்பறைகள்) குடிநீர் விநியோகம், பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர், பள்ளிகளில் வகுப்பறைகள், நூலகங்கள் மற்றும் ஆய்வுக் கூடங்கள் கட்டுதல் ஆகிய பணிகள்.

b) அங்கன்வாடி மையங்கள் மற்றும் சத்துணவு மையங்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் – அங்கன்வாடி கட்டடங்கள், சத்துணவு மையங்கள் மற்றும் சத்துணவு சமையல் கூடங்கள் மற்றும் குழந்தை நேயக் கழிப்பறை கட்டுதல், அங்கன்வாடி மையங்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்துதல் மற்றும் அங்கன்வாடி சமையல் அறைகளை எரிவாயு இணைப்பு கொண்டு நவீனப்படுத்தும் பணிகள்.

c) குடிநீர் திட்டப் பணிகள் – நீராதாரத்தினைப் பெருக்குவதற்கான, மின் விசை இறைப்பான், சிறு மின் விசை இறைப்பான், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல், புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்தல், ஆழ்குழாய் கிணறு ஆழப்படுத்தும் பணிகள், புதிய கைப் பம்பு அமைத்தல், மோட்டார் திறன் உயர்த்துதல், திறந்த வெளி கிணறு அமைத்தல், ஏற்கனவே உள்ள திறந்த வெளி கிணறுகளை ஆழப்படுத்துதல் போன்ற பணிகள்.

**1.2** <u>கோவிட்–19 **(COVID-19)** வைரஸ் தொற்று பரவல் தடுப்பு பணிகளுக்காக ரூ. 25 இலட்சம்:</u> ஊரகம் மற்றும் நகர்ப்புறங்களில் கோவிட்–19 (COVID-19) வைரஸ் தொற்று பரவலை தடுத்திடும் பொருட்டு, அரசு மருத்துவமனைகள்/மருந்தகங்கள் ஆகியவற்றுக்கு தேவையான கீழ்காணும் மருத்துவ பரிசோதனை மற்றும் சோதனைகளுக்கான உபகரணங்கள் மற்றும் இதர வசதிகளை ஏற்படுத்திட ரூ.25 இலட்சத்தினை சட்டமன்ற உறுப்பினர் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

1. மருத்துவ உபகரணங்களான வெண்டிலேட்டர்கள், மல்டி பாரா மானிட்டர்கள், சுரமானிகள் (Thermal Scanners), ஆக்சிஜன் சிலிண்டர்கள் மற்றும் ஆய்வக உபகரணங்கள் முதலானவை.
2. மருத்துவமனைக்குத் தேவையான தளவாடங்களான, படுக்கைகள், Drip Stands, விரிப்புகள் முதலானவை.
3. கிருமி நாசினி உபகரணங்களான, பவர் ஸ்பிரேயர்கள், தோள் பை ஸ்பிரேயர்கள் (Knapsack Sprayers).
4. பாதுகாப்பு உபகரணங்களான (Personal Protective Equipments), PPE Kits, மூன்றடுக்கு முகக் கவசம், N95 முகக் கவசம் முதலானவை.
5. தனிமைப்படுத்தப்பட்ட அறைகள், தனிமைப்படுத்துவதற்கான இதர வசதிகள் செய்தல்.
6. COVID-19–க்காக, பொது சுகாதாரத் துறை இயக்குநரால் பரிந்துரைக்கப்படும் இதர மருத்துவ உபகரணங்கள்.

**1.3** **இதர வரையறுக்கப்பட்ட பணிகளுக்கான ஒதுக்கீடு ரூ.25 இலட்சம்:-** வரையறுக்கப்பட்ட கூறு நிதி ரூ.1 கோடியில், மேலே 1.1 மற்றும் 1.2 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட பணிகளுக்கான ஒதுக்கீடு ரூ.75 இலட்சம் போக மீதமுள்ளதொகை ரூ. 25 இலட்சத்திற்குக் குறைவில்லாமல், சட்டமன்ற உறுப்பினர் அவர்தம் விருப்பத்தின் அடிப்படையில் ஊரகப் பகுதி மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கென கீழ்கண்ட பணிகளை எடுத்து செய்திட பரிந்துரைக்கலாம்.

**a)** <u>ஊரகப் பகுதிகளில்</u>

1. ஆதி திராவிடர் குடியிருப்புகளில், இந்திரா நினைவு குடியிருப்பு / தொகுப்பு வீடுகள், தாட்கோ மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அரசுத் திட்டங்களின் கீழ் 31.12.2010 வரை கட்டப்பட்ட வீடுகளை ஒரு வீட்டிற்கு ரூ.50,000/-(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)–க்கு மிகாமல் பழுது நீக்கும் பணிகளை மேற்கொள்ளுதல்.
2. சூரிய ஒளி சக்தி தெரு விளக்குகள் நிறுவுதல் / அரசு கட்டிடங்களின் கூரை மேல் சூரிய ஒளி சக்தி நிறுவுதல். (மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்திலிருந்து, வழங்கப்படும் மான்யத் தொகையினை பெற்று உரிய திட்டக் கணக்கில் தவறாமல் செலுத்திடல் வேண்டும்)
3. சரளை மற்றும் கப்பிச் சாலைகளை தார் சாலையாக மேம்படுத்துதல்
4. மிகவும் பழுதடைந்துள்ள தார்சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் தார்சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார் இடுகின்ற பணிகளை மட்டும் மேற்கொள்ளல்).
5. தெருக்கள் மற்றும் பாதைகளில் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் / பேவர் பிளாக் அமைக்கும் பணிகள்.
6. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசுக் கல்லூரிகள், அரசு தங்கும் விடுதிகள், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், அரசு பாலிடெக்னிக்குகள் ஆகியவைகளுக்கு அறைகள், கட்டடம் மற்றும் /அல்லது சுற்றுச்சுவர் கட்டுதல்.
7. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு ஆதரவற்றோர் விடுதிகள் ஆகியவைகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுத்தல்.
8. பாலங்கள் கட்டுதல்
9. கிராம ஊராட்சிகளில் தேவைப்படின் கூடுதல் இடுகாடு / சுடுகாடு அமைத்தல்
10. வக்ஃப் வாரியத்தில் (Wakf Board) பதிவு செய்யப்பட்ட வக்ஃப் நிறுவனங்களுக்கு சொந்தமான இடுகாடுகளுக்கு சுற்றுச்சுவர் / முள் கம்பி வேலி அமைத்தல். தற்போது வக்ஃப் வாரியத்திற்கென பொறியியல் பிரிவு இல்லை என்பதனால் இப்பணிகளை தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைப்பு செய்யலாம்.
11. பெண்கள் மற்றும் ஆண்களுக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டுதல்.
12. பொது விநியோக அங்காடி கட்டடங்கள் கட்டுதல்.
13. உடற்பயிற்சி / ஜிம்னாசியக் கூடம் கட்டுதல் மற்றும் அதற்குத் தேவையான உபகரணங்கள் வாங்குதல். இது சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் சொத்தாகக் கருதப்படும்.

b) <u>நகர்ப்புறப் பகுதிகளில்</u>

1. ஆதி திராவிடர் குடியிருப்புகளில், இந்திரா நினைவு குடியிருப்பு / தொகுப்பு வீடுகள், தாட்கோ மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அரசுத் திட்டங்களின் கீழ் 31.12.2010 வரை கட்டப்பட்ட வீடுகளை ஒரு வீட்டிற்கு ரூ.50,000/–(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)–க்கு மிகாமல் பழுது நீக்கும் பணிகளை மேற்கொள்ளுதல்.
2. சூரிய ஒளி சக்தி தெரு விளக்குகள் நிறுவுதல் / அரசு கட்டிடங்களின் கூரை மேல் சூரிய ஒளி சக்தி நிறுவுதல் மற்றும் LED தெருவிளக்குகள் நிறுவுதல், (மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்திலிருந்து வழங்கப்படும் மான்யத் தொகையினைப் பெற்று உரிய திட்டக் கணக்கில் தவறாமல் செலுத்திடல் வேண்டும்).
3. சரளை மற்றும் கப்பிச் சாலைகளை தார் சாலையாக மேம்படுத்துதல்.
4. மிகவும் பழுதடைந்துள்ள தார்சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் தார்சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார் இடப்படும் பணி மட்டும் மேற்கொள்ளல்).
5. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்.
6. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசுக் கல்லூரிகள், அரசு தங்கும் விடுதிகள், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், அரசு பாலிடெக்னிக்குகள் ஆகியவைகளுக்கு அறைகள், கட்டடம் மற்றும் / அல்லது சுற்றுச்சுவர் கட்டுதல்.
7. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு ஆதரவற்றோர் விடுதிகள் ஆகியவைகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுத்தல்.
8. பாலங்கள் கட்டுதல்.
9. சுடுகாடு / இடுகாடுகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல்.
10. தேவையின் அடிப்படையில் மழைநீர் வடிகால் வசதிகளுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் நடைபாதைகள் அமைத்தல்.
11. புதிய பொது பூங்காக்கள் அமைத்தல்.
12. பொதுக் கழிப்பிடங்கள் கட்டுதல்.
13. பொது விநியோக அங்காடி கட்டடங்கள் கட்டுதல்.
14. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் ஹைட்ராலிக் விசையால் இயக்கப்படுகின்ற கழிவு நீர் அகற்றும் இயந்திரங்கள் வாங்குதல்.
15. வக்ஃப் வாரியத்தில் (Wakf Board) பதிவு செய்யப்பட்ட வக்ஃப் நிறுவனங்களுக்கு சொந்தமான இடுகாடுகளுக்கு சுற்றுச்சுவர் / முள் கம்பி வேலி அமைத்தல். தற்போது வக்ஃப் வாரியத்திற்கென பொறியியல் பிரிவு இல்லை என்பதனால் இப்பணிகள் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைப்பு செய்யப்படலாம்.
16. உடற்பயிற்சி / ஜிம்னாசியக் கூடம் கட்டுதல் . மற்றும் அதற்குத் தேவையான உபகரணங்கள் வாங்குதல். இது சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் சொத்தாகக் கருதப்படும்.

**2. வரையறுக்கப்படாத கூறு நிதியான ரூ.1 கோடியில் எடுத்து செய்யப்படக்கூடிய பணிகள்**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், **"எதிர்மறையான பட்டியல் / தடை செய்யப்பட்ட கீழ்கண்ட பணிகளைத்"** தவிர பிற எந்தப் பணிகளையும் வரையறுக்கப்படாத கூறு நிதியின் கீழ் எடுத்துச் செய்யலாம். அதே போல் **வரையறுக்கப்பட்ட கூறு நிதியில் எடுத்து செய்யப்படக் கூடிய பணிகளையும் வரையறுக்கப்படாத கூறு நிதியான ரூ.1 கோடியில் இருந்து மேற்கொள்ளலாம்.** பயணிகள் நிழற்குடை அமைப்பது இக்கூறில் எடுத்துச் செய்திட அனுமதிக்கப்படுகின்றது.

**3. எதிர்மறையான பட்டியல் / தடை செய்யப்பட்ட பணிகள்**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பின்வரும் தடை செய்யப்பட்ட பணிகளை மேற்கொள்ளல் கூடாது. அவற்றுள் விதிவிலக்காக எடுத்து செய்ய அனுமதிக்கப்பட்ட பணிகளை விதிமுறைகளின்படி மேற்கொள்ளலாம்.

**3.1** மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகளைச் சார்ந்த கூட்டுறவு நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள் ஆகியவற்றுக்கான அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல்.

<u>விதிவிலக்குகள்:</u>

(i) நேரடிக் கொள்முதல் நிலையங்கள் (Direct Procurement Centres), கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடங்கள், மொத்த குளிர்பதன மைய (Bulk Chilling Centre) கட்டடங்கள் கட்டுதல்.

(ii) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்து பணிமனைகளுக்கான பேருந்து பராமரிப்புக் கூடம், சுற்றுச் சுவர், சிமிண்ட் கான்க்ரீட் தளம், தொழிலாளர் ஓய்வறை மற்றும் கழிவறை கட்டுதல்.

**3.2** தனிநபர் / குடும்பப் பயனுக்காக சொத்துக்களை உருவாக்குதல்.

<u>விதிவிலக்கு:</u>

(i) பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்)–ன் வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு பேரூராட்சிப் பகுதிகளில் புதிய வீடுகள் கட்டுதல்.

**3.3** அனைத்து வகையான புதுப்பித்தல், பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகள் மேற்கொள்ளுதல்.

<u>விதிவிலக்கு:</u>

(i) அரசுத் திட்டங்களின் கீழ் 31.12.2010 வரை கட்டப்பட்ட இந்திரா நினைவு குடியிருப்பு / தாட்கோ மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட வீடுகளை ஒரு வீட்டிற்கு ரூ.50,000/-(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)–க்கு மிகாமல் பழுது நீக்கும் பணிகளை மேற்கொள்ளுதல். இருப்பினும், மேற்படி வீடுகளை பழுது நீக்கம் செய்ய எடுத்துக் கொள்ளும் முன்னர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் / தாட்கோ நிறுவனத்திடமிருந்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

**3.4** அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குதல்.

<u>விதிவிலக்குகள்:</u>

(i) 2016–17ம் ஆண்டில் 15வது சட்டமன்றப் பேரவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் 14–வது சட்டமன்றப் பேரவையில் பணியாற்றி தற்போது மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மடிக்கணினி (Laptop) அல்லது மேசைக் கணினி (Desktop), பிரிண்டர் (Laser / Inkjet) மற்றும் அகண்ட அலைவரிசை இணையதள இணைப்பு வசதி (Broadband / Internet Data card connection) ஆகியவற்றை ஒரு முறை மட்டும் தேவைக்கேற்ப கொள்முதல் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு வரையில் கணினி, பிரிண்டர் மற்றும் அகண்ட அலைவரிசை / இணைய இணைப்பு வசதிகள் வாங்கப்படாமல் விடுபட்டு இருப்பின், அவ்வினங்களில் மட்டும், 2020–21ம் ஆண்டின் வரையறுக்கப்படாத கூறு நிதியில் இருந்து அரசாணை (நிலை) எண். 95 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1) துறை நாள்: 18–8–2016ல் அனுமதி அளித்துள்ளவாறு வழிகாட்டி நெறிமுறைகளுக்குட்பட்டு கொள்முதல் செய்து கொள்ளுதல்.

(ii) அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு விடுதிகள், அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு பாலிடெக்னிக்குகள் ஆகியவற்றிற்கு தளவாட சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்.

(iii) அரசு ஆணை (1டி) எண். 405, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி-1) துறை, நாள். 17.08.2010 மற்றும் அரசு கடித (1டி) எண். 653, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள். 31.12.2012-ல் குறிப்பிட்டுள்ளபடி மாற்றுத் திறனாளிகளுக்கு கருவிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.5 லட்சம் அல்லது அதற்கு மேலான மதிப்பிற்கு வாங்குதல்.

(iv) போலியோ மற்றும் மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டோருக்காக CP Chair வாங்குதல் மற்றும் மனவளர்ச்சி குன்றிய அரசு சிறப்பு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு அறிவுத்திறனை மேம்படுத்தும் பொருட்டு, மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு கற்பிக்கும் கருவி கலப் பெட்டிகள் வாங்குதல்.

(v) உடற்பயிற்சி / ஜிம்னாசியக் கூடத்தில் (physical fitness centre /Gymnasium) உடற்பயிற்சி செய்ய தேவையான கருவிகள் வாங்குதல். இவை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் சொத்தாகக் கருதப்படும்.

(vi) தற்போதுள்ள அரசு கட்டடங்களில் சூரியசக்தி மின்கலன்கள் (Solar Power Equipement) நிறுவுவதற்காக உபகரணங்கள் வாங்குதல்.

(vii) பொதுமக்களின் பாதுகாப்பிற்காக, மாவட்ட ஆட்சித் தலைவர் / காவல் கண்காணிப்பாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / பெருநகர சென்னை மாநகர காவல் ஆணையர் மூலம் உரிய கொள்முதல் விதிகளைப் பின்பற்றி கண்காணிப்பு (CCTV-Closed Circuit Television) கேமிராக்கள் மற்றும் அது தொடர்புடைய உபகரணங்களை வாங்குதல்.

**3.5** அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள், அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதிப் பள்ளிகள், சுயநிதிக் கல்லூரிகளில் எவ்விதப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.

**3.6** அனைத்து வணிக நிறுவனங்கள்/ அலகுகள் குறித்த பணிகள்.

**3.7** மானியம் மற்றும் கடன் வழங்குதல் மற்றும் மத்திய, மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்கு பங்களித்தல்.

**3.8** நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்.

**3.9** முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகள் அல்லது இனங்களுக்கான தொகை மீளச் செலுத்துதல்.

**3.10** அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்.

**3.11** மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள் / குழுக்களுக்கு சொந்தமான நிலங்களில் பணிகள்.

**3.12** குட்டைகள், ஊரணிகள், ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் வாய்க்கால்கள் போன்றவைகளைத் தூர் வாருதல்.

**3.13** சரளை / கப்பி சாலைகள் (தார்சாலை வரை அமைக்கும் சாலைப்பணிகளை மட்டுமே எடுத்துக்கொள்ளலாம்).

**3.14** உயர் கோபுர மின் விளக்குகள் பொருத்துதல்.

**4.** சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் மொத்த நிதியில் 22 சதவீதம் ஊரகப் பகுதிகளில் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் அதிக எண்ணிக்கையில் வாழும் பகுதி மற்றும் நகர்புறங்களில் குடிசை பகுதிகளில் (slum) வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் அப்பகுதிக்கென ஒதுக்கப்பட வேண்டும்.

**5.** பணிகளை செயல்படுத்துதல் / தளவாடச் சாமான்களை கொள்முதல் செய்வது ஆகியவை 1998-ம் ஆண்டு, தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் சட்டம், மற்றும் அதன் 2000-ம் ஆண்டு விதிகளின்படி மேற்கொள்ளப்பட வேண்டும்.

**6.** திட்டச் செயலாக்கத்தின் போது, தேவையின் அடிப்படையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருடன் கலந்தாலோசித்து மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளில் தேவையான மாறுதல்களை செய்து கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகின்றது.

**ஹன்ஸ் ராஜ் வர்மா,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**// உண்மை நகல் //**

**பிரிவு அலுவலர்.**